**ஏப்ரல் – 24**

# TNPSC துளிகள்

- இந்திய இராணுவமானது, வடக்கு வங்காளத்தின் அடர்ந்த காடுகளிலிருந்து சிக்கிமின் பனிப் படர்ந்த சிகரங்கள் வரையிலான ஒரு பயணத்தை உள்ளடக்கிய மிக உயரமான பகுதிகளில் மேற்கொள்ளப்படும் ARMEX-24 எனப்படும் சாகசப் பயணத்தினை நிறைவு செய்துள்ளது.
- ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் தலைநகராகத் திட்டமிடப்பட்டுள்ள அமராவதியானது, முழுமையாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தியால் இயங்குகின்ற உலகின் முதல் நகரமாக கட்டமைக்கப்பட்டு ஒரு புதிய வரலாற்றினை படைக்க உள்ளது.
- இந்திய விமானப் படையானது ஐக்கிய அரபு அமீரகத்தினால் நடத்தப் படும் டெசர்ட் பிளாக்-10 பயிற்சியில் ஆஸ்திரேலியா, பஹ்ரைன், பிரான்சு, ஜெர்மனி, கத்தார், சவுதி அரேபியா, கொரியக் குடியரசு, துருக்கி, ஐக்கிய அரபு அமீரகம், ஐக்கியப் பேரரசு மற்றும் அமெரிக்கா ஆகியவற்றுடன் இணைந்து பங்கேற்கிறது.
- மொராக்கோவில் நடைபெற்ற GITEX ஆப்பிரிக்கா 2025 எனப்படும் ஆப்பிரிக்காவின் மிகப்பெரியத் தொழில்நுட்ப மற்றும் புத்தொழில் நிகழ்ச்சியில் இந்தியா பங்கேற்றது.
- வெளியுறவு அமைச்சகம் மற்றும் கார்னகி இந்தியா நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்திய 9வது உலகளாவிய தொழில்நுட்ப உச்சி மாநாடானது (GTS) புது டெல்லியில் நடைபெற்றது.
- காசாவில் இஸ்ரேலியத் தாக்குதலில் இருந்து தப்பிச் செல்லும் போது மிகவும் பலத்த காயமடைந்த ஒரு சிறுவனைச் சித்தரிக்கும் மனதை உருக்கும் புகைப்படத்திற்காக, தோஹாவைச் சேர்ந்த பாலஸ்தீன நாட்டின் புகைப்படக் கலைஞர் சமர் அபு எலூஃப் என்பவருக்கு 2025 ஆம் ஆண்டின் சிறந்த உலகப் பத்திரிகை புகைப்பட விருது வழங்கப் பட்டு உள்ளது.
- வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (APEDA) உதவியுடன் இந்திய மாதுளைகள் மகாராஷ்டிராவிலிருந்து அமெரிக்காவிற்கு வணிக ரீதியாக கடல் வழியாக மிகவும் முதன் முறையாக ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளன.
- ஐதராபாத்தில் உள்ள ஒஸ்மானியா பல்கலைக்கழகத்தின் புகழ்பெற்றப் பாரம்பரியக் கலைக் கல்லூரி கட்டிடம் ஆனது இந்திய நாட்டு அரசாங்கத்தின் வர்த்தக முத்திரை பதிவேட்டில் அதன் முகப்பு வர்த்தக முத்திரையைப் பதிவு செய்த நாட்டின் மூன்றாவது கட்டிடமாகும்.
    - இந்தியாவில் ஏற்கனவே வர்த்தக முத்திரை பெற்ற இரண்டு கட்டிடங்கள் என்பவை - தாஜ் மஹால் பேலஸ் தங்கும் விடுதி மற்றும் மும்பையில் உள்ள மும்பைப் பங்குச் சந்தை கட்டிடம் ஆகியனவாகும்.


# தேசியச் செய்திகள்

## 2025 ஆம் ஆண்டு கோதுமை உற்பத்தியின் முன்கணிப்பு

- 2025 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி அன்று நிலவரப்படி, கோதுமைப் பயிர் வளரும் இந்தியாவின் எட்டு முக்கிய மாநிலங்களின் மொத்த கோதுமைப் பயிர் உற்பத்தி என்பது சுமார் 122.724 மில்லியன் டன்களாக இருக்கும் என்று இஸ்ரோ மதிப்பிட்டுள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டின் ராபிப் பயிர் பருவத்திற்கான முன் கணிப்பிற்காக இது EOS-04 (RISAT-1A), EOS-06 (Oceansat-3) மற்றும் Resourcesat-2A ஆகியவற்றிலிருந்துப் பெறப்பட்ட

ஒளியிழை மற்றும் புவி மேற்பரப்பினைத் துல்லியமாகப் படம் பிடிக்கும் ரேடார் (SAR) தொலை உணர்வு தரவுத் தொகுப்புகளைப் பயன்படுத்தியது.

- 2024-25 ஆம் ஆண்டு ராபிப் பருவத்தில், கோதுமை வளரும் இந்தியாவின் எட்டு முக்கிய மாநிலங்களில் கோதுமைப் பயிரின் விதைப்பில் உள்ள முன்னேற்றம் ஆனது நன்கு கண்காணிக்கப்படுகிறது.
- கோதுமை வளரும் எட்டு முக்கிய மாநிலங்கள் உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், பஞ்சாப், ஹரியானா, பீகார், குஜராத் மற்றும் மகாராஷ்டிரா ஆகியன ஆகும்.




## புதுப்பிக்கப்பட்ட மைக்ரோடேட்டா இணைய தளம்




- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகம் (MOSPI) ஆனது, புதுப்பிக்கப் பட்ட மைக்ரோடேட்டா இணைய தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

- தேசியக் கணக்கெடுப்புகள் மற்றும் பொருளாதாரக் கணக்கெடுப்பிலிருந்து சேகரிக்கப் பட்ட விரிவான புள்ளிவிவரங்கள் தரவுகளுக்கான மையப்படுத்தப்பட்டக் களஞ்சியமாக இந்தப் புதிய இணைய தளம் செயல்படுகிறது.
- சமீபத்தில் தேசியப் புள்ளிவிவரங்கள் அமைப்பு பயிற்சிக் கழகத்தின் வலைதளமும் தொடங்கப் பட்டுள்ளது.

## பாலங்கள் கட்டமைப்புகளுக்கான மூலப் பொருட்கள் இருப்பு மற்றும் கட்டமைப்பு மதிப்பீட்டு அமைப்பு

| Condition Rating | Description |
|---|---|
| 9 | Excellent Condition |
| 8 | Very Good Condition |
| 7 | Good Condition |
| 6 | Satisfactory Condition |
| 5 | Fair Condition |
| 4 | Poor Condition |
| 3 | Serious Condition |
| 2 | Critical Condition |
| 1 | Imminent Failure Condition |

- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) ஆனது, ஒரு மிகப் புதிய தரவரிசைப் நெறிமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது அவற்றின் கட்டமைப்புப் பாதுகாப்பைத் தீர்மானிப்பதற்கு வேண்டி அதன் உள் கட்டமைப்புச் வசதிகளைத் தரமிடுதலையும், அவற்றின் பராமரிப்பு மற்றும் அவற்றின் வழக்கமான கண்காணிப்புக்கான தீர்வு நடவடிக்கைகளைத் தேடுவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் புதிய அமைப்பானது, பாலங்கள் கட்டமைப்புகளுக்கான மூலப் பொருட்கள் மற்றும் கட்டமைப்பு மதிப்பீட்டு அமைப்பு (BICRS) ஆனது ஆண்டிற்கு இரண்டு முறை பாலங்களின் விரிவான ஆவணமாக்கல், மதிப்பீடு மற்றும் ஆய்வு ஆகியவற்றை நன்கு மேற்கொள்வதைக் கட்டாயமாக்குகிறது.
- இந்த மதிப்பீட்டு முறையின் ஒரு முக்கியப் பகுதியாக, அந்த முகமையானது அதன் அனைத்துக் கட்டமைப்புகளின் ஒருங்கிணைந்தக் களஞ்சியத்தைத் தயாரிப்பதை ஒரு முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதோடு ஒவ்வொரு கட்டமைப்பிற்கும் ஒரு ஒருங்கிணைந்த மதிப்பீட்டு அடையாள எண் ஒதுக்கப்படும்.

# சர்வதேசச் செய்திகள்

## பிரிக்ஸ் நாடுகளின் நில மறுசீரமைப்பு கூட்டாண்மை 2025

- வேளாண்மை குறித்த பிரிக்ஸ் அமைப்பின் செயற்குழுவின் இரண்டாவதுக் கூட்டம் ஆனது பிரேசிலின் தலைநகரில் நடைபெற்றது.
- உணவுப் பாதுகாப்பு, நிலையான வேளாண் உற்பத்தி மற்றும் தரமிழந்தப் பகுதிகளின் மறுசீரமைப்பு ஆகிய களங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய முயற்சிகள் குறித்து விவாதிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நிலத் தரமிழப்பு, பாலைவனமாக்கல் மற்றும் மண்வள இழப்பு ஆகிய சிலவற்றினை

நிவர்த்தி செய்வதற்காக என அக்குழு "பிரிக்ஸ் நில மறுசீரமைப்பு கூட்டாண்மையை" தொடங்கியுள்ளது.

- அறிவியல் பூர்வத் தீர்வுகள் மற்றும் சில புதுமையான நிதிசார் செயல்முறைகளின் அடிப்படையில், தரமிழந்த நிலத்தை மீட்டெடுப்பது, மண் வளத்தினைப் பாதுகாப்பது மற்றும் நீர் வளங்களை மிகவும் திறம்படப் பயன்படுத்துவதற்கான முயற்சிகளை ஒருங்கிணைப்பதே இந்த முன்னெடுப்பின் நோக்கமாகும்.
- இந்தக் கூட்டாண்மையானது உலகின் தெற்கு (வளரும்) நாடுகளை ஒரு மையமாகக் கொண்டு, நீண்டகால மறுசீரமைப்பு உத்திகளில் அரசாங்கங்கள், தனியார் துறை மற்றும் உள்ளூர்ச் சமூகங்களை ஈடுபடுத்த முயல்கிறது.




## பாலிகடான் கூட்டு இராணுவப் பயிற்சி 2025




- பிலிப்பைன்ஸ் நாடானது அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய சில நாடுகள் பங்கேற்கும் பாலிகடான் கூட்டு இராணுவப் பயிற்சியினை நடத்த உள்ளது.
- இந்தப் பாலிகடான் பயிற்சியானது, 2002 ஆம் ஆண்டு முதல் பிலிப்பைன்ஸ் மற்றும் அமெரிக்காவிற்கு இடையே நடத்தப்பட்டு வரும் வருடாந்திரப் பயிற்சி ஆகும்.
- ஜப்பான் நாடானது, இந்த ராணுவப் பயிற்சியில் முதல் முறையாக அதிகாரப்பூர்வமாக பங்கேற்க உள்ளது.
- இது முதன்மையாக தென் சீனக் கடல் மற்றும் லூசான் ஜலசந்தியில் அமைந்துள்ள நெருக்கடிகள் மிக்க பகுதிகளுக்கு அருகில் உள்ள பலவான் மற்றும் லுசோன் ஆகிய

தீவுகளைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறது.

- பாலிகடான் என்றால், டாகாலோக் எனப்படுகின்ற மிக முதன்மையான மொழியான ஆஸ்ட்ரோஆசிய மொழியில் "தோளோடு தோள் கொடுத்தல்" (shoulder-to-shoulder) எனப் பொருள்படும்.
- மேலும், இந்த ஆண்டில் சுமார் பத்தொன்பது நாடுகளானது இப்பாலிகடான் பயிற்சிக்கு பார்வையாளர்களை அனுப்பியுள்ளன.
- கனடா, ஜெர்மனி, ஐக்கியப் பேரரசு, செக் குடியரசு, போலந்து மற்றும் கொலம்பியா ஆகியவை பார்வையாளர்களை அனுப்புவதை முதலில் உறுதி செய்தன.

## இந்தியா-நார்வே கடல் மாசுபாடு முன்னெடுப்பு


- இந்தியா-நார்வே கடல் மாசுபாடு முன்னெடுப்பு (INMPI) என்பது நீலக்கடல் குப்பைகள் மற்றும் நுண் நெகிழிகள் (MPs) போன்ற மாசுபாடுகளை அகற்றுவதற்காக இந்தியா மற்றும் நார்வே நாட்டு அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய இருதரப்பு முன்னெடுப்பாகும்.
- இது 2019 ஆம் ஆண்டில் இந்தியா-நார்வே பெருங்கடல் மீதானப் பேச்சுவார்த்தையின் கீழ் தொடங்கப் பட்டது.
- நிலப்பரப்புகளில் கடல்சார் நெகிழி மாசுபாட்டைக் குறைப்பதற்குப் பல திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.
- தற்போது, பூசணிக்காய் சார்ந்த உணவுப் பொருள் தயாரிப்புக் கழிவுகள் மற்றும் காலணி உற்பத்திக் கழிவுகளை மேலாண்மை செய்வதில் ஏற்பட்ட வெற்றிகரமான நடவடிக்கைகளுடன், ஆக்ராவின் கழிவு சுழற்சியை மேம்படுத்தவும், யமுனை ஆற்றில் நெகிழிக் கழிவுக் கசிவைக் குறைக்கவும் INMPI உதவியுள்ளது.




## ராஸ் இசா துறைமுகம் மீதான தாக்குதல்


- ஹவுதி கிளர்ச்சியாளர்களின் ஒரு கூற்றுப்படி, ஏமனில் உள்ள ராஸ் இசா எண்ணெய் துறைமுகத்தின் மீது அமெரிக்கா வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது.
- அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அவர்களால் அறிவிக்கப்பட்டு ஹவுதிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட புதிய இராணுவ நடவடிக்கைகளில் இதுவரையில் அறியப் பட்ட மிக மோசமான தாக்குதலை இது குறிக்கிறது.

- ராஸ் இசா மீதான தாக்குதல் ஆனது முதல் முறையாக எண்ணெய் அகழந்தெடுப்பு உள்கட்டமைப்பினை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட மிக மோசமான தாக்குதல் ஆகும்.
- 2023 ஆம் ஆண்டு நவம்பர் முதல் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் ஹவுதிகள் 100க்கும் மேற்பட்ட கப்பல்களைத் தாக்கி, நான்கு மாலுமிகளைக் கொன்றனர் என்ற நிலையில் இந்தச் சம்பவம் செங்கடலில் வர்த்தக நிலையினைச் சீர்குலைத்தது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஆர்யபட்டா செயற்கைக்கோள் ஏவப்பட்டதன் 50 ஆம் ஆண்டு நிறைவு





e

- 1975 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் தேதியன்று, இந்தியாவானது தனது முதல் செயற்கைக் கோளான ஆர்யபட்டாவை விண்ணில் ஏவியது.
- இஸ்ரோ நிறுவனத்தினால் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட

இந்த ஆர்யபட்டா செயற்கைக் கோளானது, சோவியத் ஒன்றியத்தில் இருந்து சோவியத் காஸ்மோஸ்-3M ஏவுகலத்தின் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.

- ❖ ஊடு கதிர்வீச்சு சார் வானியல், சூரிய இயற்பியல் மற்றும் வளிமண்டலவியல் ஆகியவற்றில் சோதனைகளை மேற்கொள்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- ❖ ஆனால் தனது சுற்றுப்பாதையில் நுழைந்த ஐந்து நாட்களுக்குப் பிறகு, ஆர்யபட்டா செயற்கைக் கோளில் மின்னிணைப்பு செயலிழந்தது.
- ❖ அதனுடனான தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டதால், அதன் அறிவியல் சார் ஆய்வு நோக்கங்கள் நிறைவு செய்யப்படவில்லை.

## ChaSTE கருவி




- ❖ சந்திராவின் மேற்பரப்பு வெப்பஇயற்பியல் பரிசோதனை (ChaSTE) என்பது சந்திரனின் தென் துருவத்திற்கு அருகில் உள்ள சில பகுதிகளில் இடம் சார்ந்த வெப்பநிலையை அளவிடுவதற்கான முதல் கருவியாக மாறியுள்ளது.
- ❖ இதன் முந்தைய இரண்டு ஏவுதல்கள் தோல்வியடைந்த பிறகு, விண்வெளியில் வெப்ப ஆய்வுக் கருவியினை நிலை நிறுத்துவதற்காக வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்ட முதல் திட்டம் இதுவாகும்.
- ❖ 2014 ஆம் ஆண்டு நவம்பர் 12 ஆம் தேதியன்று, ஐரோப்பிய விண்வெளி முகமையின் ரொசெட்டா என்ற விண்கலத்துடன் இணைக்கப்பட்ட ஃபிலே எனும் தரையிறங்கு கலம் ஆனது, 67P/சுர்யுமோவ்-ஜெராசிமென்கோ எனும் ஒரு வால் நட்சத்திரத்தின் மீது தரை இறங்கியது.
- ❖ வெப்பநிலையை அளவிடுவதற்கான கருவிகளைக் கொண்டிருந்த இந்தக் கலத்தினை, மோசமான தரையிறக்கச் சூழல் காரணமாக முறையாக பயன்படுத்த முடியவில்லை.

## HANSA-3 (NG) பயிற்சி விமானம்


- ❖ முதன்முறையாக தேசிய விண்வெளி ஆய்வகங்கள் (NAL) நிறுவனமானது இந்தியாவில் பயிற்சி விமானங்களைத் தயாரிப்பதற்கான தொழில்நுட்பப் பரிமாற்ற ஒப்பந்தத்தில் ஒரு தனியார் நிறுவனத்துடன் கையெழுத்திட்டுள்ளது.
- ❖ உள்நாட்டிலேயே முழுமையாக வடிவமைக்கப் பட்டு உருவாக்கப் பட்ட ஒரு தொழில் நுட்பத்தின் அடிப்படையில் இந்தியாவில் விமானங்கள் தயாரிக்கப் படுவது இதுவே முதல் முறையாகும்.

- இரண்டு இருக்கைகள் கொண்ட Hansa-3 NG விமானம் ஆனது, 1998 ஆம் ஆண்டிலிருந்து, NAL நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட HANSA விமானங்களின் சமீபத்திய மறுவடிவம் ஆகும்.
- தற்போது, இந்தியாவின் விமானிப் பயிற்சி நிறுவனங்களில் நன்கு பயன்படுத்தப்படும் அனைத்து விமானங்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### காந்தி சாகர் சரணாலயத்தில் சிவிங்கிப் புலிகள்




- மத்தியப் பிரதேசத்தின் மண்டசௌர் மாவட்டத்தில் உள்ள காந்தி சாகர் வனவிலங்கு சரணாலயத்தில் இரண்டு சிவிங்கிப் புலிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.
- பவாக் மற்றும் பிரபாஷ் என்ற ஆறு வயது ஆண் சிவிங்கிப் புலிகள், 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தென்னாப்பிரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்டன.
- இந்த சரணாலயத்திற்கு மாற்றப் படுவதற்கு முன்பு அவை குனோ தேசியப் பூங்காவில் தங்க வைக்கப்பட்டன.

- காந்தி சாகர் சரணாலயம் ஆனது குனோ தேசியப் பூங்காவிற்கு அடுத்தபடியாக, அம்மாநிலத்தில் மட்டுமின்றி, நாட்டிலும் சிவிங்கிப் புலிகள் இடமாற்றம் செய்யப்படும் இரண்டாவது இடமாக மாறியுள்ளது.
- குனோ தேசியப் பூங்காவில் தற்போது 26 சிவிங்கிப் புலிகள் காணப்படுகின்றன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய வர்த்தகக் கண்ணோட்டம் மற்றும் புள்ளிவிவரங்கள் அறிக்கை 2025


- ஜெனீவாவில் அமைந்துள்ள உலக வர்த்தக அமைப்பு ஆனது, 2025 ஆம் ஆண்டிற்கான அதன் உலகளாவியச் சரக்கு வர்த்தக அளவு வளர்ச்சிக் கணிப்பைப் பெருமளவில் திருத்தியமைத்துள்ளது.
- தற்போதைய நிலைமைகளின் கீழ் உலகளாவியச் சரக்கு வர்த்தகத்தின் அளவு 0.2% குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்த நிலைமை மோசமடைந்தால், 2025 ஆம் ஆண்டில் வர்த்தகம் மேலும் 1.5% ஆகக் குறையக்கூடும்.
- இது உலகச் சரக்கு வர்த்தகத்தின் அளவு 2.9% அதிகரித்த 2024 ஆம் ஆண்டிலிருந்த மதிப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும்.




## "வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுத் தொலைநோக்குகள் 2025" அறிக்கை


- "வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுத் தொலைநோக்குகள் 2025 – நெருக்கடிச் சூழலின் கீழ்: நிச்சயமற்ற ஒரு தன்மையானது உலகளாவியப் பொருளாதார வாய்ப்புகளை மறு வடிவமைக்கிறது" என்ற தலைப்பிலான அறிக்கையாகும்.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் (UNCTAD) வெளியிடப்பட்டது.
- உலக அளவிலான வளர்ச்சியானது, வெறும் 2.3 சதவீதமாகக் குறையும் என்று தற்போது எதிர்பார்க்கப் படுகிறது.
- குறைவான வருமானம் கொண்ட சுமார் 68 நாடுகளுள், 35 நாடுகள் ஆனது கடன் நெருக்கடியில் உள்ளன அல்லது கடன் நெருக்கடி நிலையை எட்டும் ஒரு நிலைமையில் உள்ளன.

- அதிக அரசாங்கச் செலவினம் மற்றும் பணவியல் கொள்கைகளின் தூண்டுதலுடன் வளர்ச்சியைத் தூண்டும் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.
- தெற்கு-தெற்கு (வளர்ந்து வரும் நாடுகளுக்கிடையிலான) வர்த்தகமானது, தற்போது உலகளாவிய வர்த்தகத்தில் ~1/3 பங்கினைக் கொண்டுள்ளது.
- சீனாவின் மீதான வளர்ச்சி விகிதமானது சுமார் 4.4 சதவீதமாக இருக்கும் என்று இந்த அறிக்கை கணித்துள்ள அதே நேரத்தில் அமெரிக்கப் பொருளாதாரம் ஆனது 1 சதவீதம் வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




# மாநிலச் செய்திகள்

## கோக்போரோக் - 8வது அட்டவணை




- திரிபுராவின் கோக்போரோக் சாகித்ய பரிஷத் ஆனது, அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் கோக்போரோக் மொழியைச் சேர்க்க முயன்று வருகிறது.
- கோக்போரோக் மொழிக்கான எழுத்து வடிவம் ஆனது வங்காளம் அல்லது தேவ நாகரி எழுத்து வடிவமாக இருக்கலாம் என்று இந்தப் பழங்குடியினரின் இலக்கிய அமைப்பு

கூறியது.

- ❖ கோக்போரோக் ஆனது, திரிபுராவின் பழங்குடியினச் சமூகங்களில் மிகப் பழமையான மற்றும் பரவலாகப் பேசப்படும் மொழிகளில் ஒன்றாகும்.
- ❖ கோக்போரோக் மொழியை தேவநாகரி அல்லது வங்காள எழுத்து வடிவங்களில் மிகச் சரியாகவும் பொருத்தமாகவும் எழுதலாம்.

## மகாராஷ்டிராவின் புதிய கல்விக் கொள்கை 2025

**NEP IMPLEMENTATION**

- The three-language formula for Classes 1 to 5 is a part of the new curriculum implementation under the National Education Policy (NEP) 2020
- Maharashtra school education department has declared a phase-wise implementation plan of the new curriculum designed as per NEP 2020 recommendations

- ❖ மகாராஷ்டிரா மாநில அரசின் பள்ளிக் கல்வித் துறை ஆனது, தற்போது 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையில், மராத்தி மற்றும் ஆங்கில வழிப் பள்ளிகளில், இந்தி மொழியை மூன்றாம் மொழியாக கற்பிப்பதைக் கட்டாயமாக்கியுள்ளது.
- ❖ இது 2020 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கையுடன் (NEP) ஒத்திசைந்துள்ளது.
- ❖ NEP கொள்கையின் படியான ஒரு புதியப் பாடத் திட்டம் ஆனது, 2025-26 ஆம் ஆண்டில் முதலாம் வகுப்பில் அறிமுகப்படுத்தப்படும்.
- ❖ இந்தக் கொள்கையானது 2, 3, 4 மற்றும் 6 ஆம் வகுப்புகளுக்கு 2026-27 ஆம் ஆண்டிலும், 5, 9 மற்றும் 11 ஆம் வகுப்புகளுக்கு 2027-28 ஆம் ஆண்டிலும், மற்றும் 8, 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கு 2028-29 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்படும்.
- ❖ இதுவரையில் அரசுப் பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரையில் மராத்தி மற்றும் ஆங்கிலம் மொழிகள் மட்டுமே கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- ❖ மராத்திய மொழியானது தற்போதைய பாடத் திட்டத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தாலும், 25 ஆண்டுகளுக்கு முன்னதாக 2000 ஆம் ஆண்டில் ஆங்கிலம் ஒரு கட்டாயப் பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- ❖ தற்போதைய நிலவரப்படி, அரசுப் பள்ளிகளில் 5 ஆம் வகுப்பிலிருந்து இந்தி மொழி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- ❖ 5, 6 மற்றும் 7 ஆம் வகுப்புகளுக்கு இந்தி மொழி கற்பிக்கப்படுகிறது.
- ❖ 8 ஆம் வகுப்பு முதல், இந்தி மொழி பயில்வதைத் தொடரலாம் அல்லது அதற்குப் பதிலாக சமஸ்கிருதம் அல்லது வேறொரு அயல் மொழியைத் தேர்வு செய்யலாம்.
- ❖ மகாராஷ்டிரா மாநிலக் கல்வி வாரியம் ஆனது வங்காளம், தமிழ், கன்னடம், குஜராத், உருது, இந்தி மற்றும் தெலுங்கு போன்ற பல்மொழி வழிப் பள்ளிகளை நடத்துகிறது என்பதோடு மேலும், இவற்றுக்கானப் பாடப் புத்தகங்கள் பால் பாரதி அமைப்பினால் உருவாக்கப்படுகின்றன.

- இந்தப் பள்ளிகள் அனைத்திலும், மராத்தி மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் ஆனது அம்மாநிலத்தின் பயிற்று மொழியை முதன்மை மொழியுடன் சேர்த்து கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

### வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கு (BLAs) பயிற்சி




- முதன்முறையாக, பீகார் மாநிலத்தில் நடைபெறவுள்ள ஒரு சட்டமன்றத் தேர்தலைக் கருத்தில் கொண்டு, இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) ஆனது பீகார் மாநிலத்தின் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கு (BLAs) பயிற்சி அளிக்கத் தொடங்கியுள்ளது.
- வாக்காளர் விதிகளின் பதிவு, 1960; தேர்தல் நடத்தை விதிகள், 1961, 1950 மற்றும் 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் நன்கு விவரிக்கப்பட்டுள்ளபடி, இந்தப் பயிற்சித் திட்டம் ஆனது அவர்களின் சில பொறுப்புகளை நிறைவேற்ற உதவும் என்று ஆணையம் கூறியது.
- வாக்குச்சாவடி நிலை முகவர்கள் என்போர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளால் நியமிக்கப் படுகிறார்கள் என்பதோடு, 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் சில விதிகளின்படி பிழையற்ற ஒரு வாக்காளர் பதிவுப் பட்டியலை உறுதி செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர்.
- வாக்குச்சாவடி நிலை முகவர்கள் வெளியிடப்பட்ட அந்த இறுதி வாக்காளர் பட்டியலில் ஏதேனும் குறை இருந்தால், 1950 ஆம் ஆண்டு RP சட்டத்தின் 24(a) மற்றும் 24(b) ஆகியப் பிரிவுகளின் கீழ் முதல் மற்றும் இரண்டாவது முறையீடுகளைப் பயன்படுத்துவதில் அவர்கள பயிற்சி பெறுகின்றனர்.


## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### போப் பிரான்சிஸ் மறைவு

- கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரும் வாடிகன் சிட்டி அரசின் இறையாண்மை கொண்ட தலைவர் போப் பிரான்சிஸ் சமீபத்தில் காலமானார்.
- அர்ஜென்டினாவில் ஜார்ஜ் மரியோ பெர்கோக்லியோ என்ற தனது பெயரில் பிறந்த பிரான்சிஸ், 2013 ஆம் ஆண்டில் முதல் கிருத்தவப் போப்பாகவும், இலத்தீன்

அமெரிக்காவினைச் சேர்ந்த முதல் போப்பாகவும் பதவியேற்று இவர் மிகவும் புதிய வரலாற்றைப் படைத்தார்.


- சுமார் 1,200 ஆண்டுகளுக்கும் மேலான நடைமுறையில் ஒரு ஐரோப்பியரல்லாத போப் ஆண்டவராக திகழ்ந்த முதல் முதல் நபர் இவரே ஆவார்.
- அவர் 1998 ஆம் ஆண்டில் பியூனஸ் அயர்ஸின் பேராயரானார் என்பதோடு 2001 ஆம் ஆண்டில் போப் இரண்டாம் ஜான் பால் அவர்களால் அதன் திருச்சபை அதிகாரியாக (கார்டினலாக) நியமிக்கப்பட்டார்.
- போப் பத்தாம் பயஸுக்குப் பிறகு போப்பாண்டவர் குடியிருப்புகளுக்கு வெளியே வாழ்ந்த முதல் போப் இவர்தான்.
- 2019 ஆம் ஆண்டில் அரேபியத் தீபகற்பத்தில் திருப்பலி நிறைவேற்றிய முதல் போப் பிரான்சிஸ் ஆவார்.
- புலம்பெயர்ந்தோரின் பாதுகாப்பை "மக்களின் கடமை" என்று அவர் கூறி, குடியேற்ற எதிர்ப்பு அரசியலை விமர்சித்தார்.
- 2022 ஆம் ஆண்டில், கனடிய பழங்குடியின மக்களின் "கலாச்சார மற்றும் பெரும் இனப் படுகொலையில்" திருச்சபையின் பங்கிற்கு அவர் மன்னிப்பு கேட்டார்.
- உலகளாவிய அளவில் மரண தண்டனையை ஒழிக்கும் நடவடிக்கையை ஆதரிப்பதாக பிரான்சிஸ் கத்தோலிக்கத் திருச்சபைக்கு உறுதியளித்தார்.
- வாடிகானில் முன்னர் ஆண்கள் மட்டுமே வகித்த பல்வேறு பதவிகளுக்கு பெண்களை அவர் நியமித்தார்.
- பதினெட்டாம் லியோவிற்குப் பிறகு, வாடிகனுக்கு வெளியே உடலடக்கம் செய்யப்பட உள்ள முதல் போப் இவரே ஆவார்.




## WAVES 2025 – கடற்கொள்ளைக்கு எதிரான சவால்

- கடற்கொள்ளைக்கு எதிரான சவால் என்பது, 2025 ஆம் ஆண்டு WAVES (உலக ஒலி-ஒளி & பொழுதுபோக்கு உச்சி மாநாடு) மாநாட்டின், இந்தியாவில் உருவாக்குதல் சவாலின் முதலாவது தொடரின் கீழான ஒரு முன்னோடியான முன்னெடுப்பாகும்.
- WAVE உச்சி மாநாடு ஆனது, இந்திய நாட்டு அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகத்தினால் 2025 ஆம் ஆண்டு மே 01 முதல் 04 வரையிலான தேதிகளில் மும்பையில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

- கடற்கொள்ளைக்கு எதிரான ஒரு சவாலுக்கான முதல் ஏழு இறுதிப் போட்டியாளர்கள் இதில் அறிவிக்கப்பட்டுள்ளனர்.
- இறுதிப் போட்டியாளர்கள் மற்றும் அவர்களின் தீர்வு நுட்பங்கள்.




# இதரச் செய்திகள்

## 16 புதிய உலகளாவியப் புவிசார் பூங்காக்கள் – யுனெஸ்கோ




- யுனெஸ்கோ அமைப்பானது, ஏப்ரல் 17 ஆம் தேதியன்று 11 நாடுகளில் உள்ள 16 புதிய தளங்களை இந்த ஆண்டு அதன் 10வது ஆண்டு நிறைவை நன்கு குறிக்கின்ற அதன் உலகளாவிய புவிசார் பூங்காக்கள் வலையமைப்பில் சேர்த்துள்ளது.
- இந்த வலையமைப்பில் புதிதாக இடம் பெற்றுள்ள புவிசார் பூங்காக்கள் சீனா, வட கொரியா, ஈக்வடார், இந்தோனேசியா, இத்தாலி, நார்வே, தென் கொரியா, சவுதி அரேபியா, ஸ்பெயின், ஐக்கியப் பேரரசு மற்றும் வியட்நாம் ஆகிய சில நாடுகளில் அமைந்துள்ளன.

- வட கொரியாவின் தளமானது இந்த வலையமைப்பில் சேர்க்கப்பட்டதன் மூலம், அதன் வரலாற்றில் முதல் முறையாக இத்தகைய பதிவினைப் பெற்றுள்ளது.
- சவுதி அரேபியா புதிதாக நியமிக்கப்பட்ட இரண்டு புவிசார் பூங்காக்களுடன் இந்தப் பட்டியலில் முதல் முறையாக அறிமுகமாகியுள்ளது.
- புதிய உள்ளீடுகளுடன், இந்த வலையமைப்பானது தற்போது சுமார் 50 நாடுகளில் 229 தளங்களைக் கொண்டுள்ளது.
- யுனெஸ்கோ அமைப்பின் உலகளாவியப் புவிசார் பூங்காக்கள் பட்டியலில் இதுவரை எந்த இந்தியத் தளமும் இடம் பெறவில்லை.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★